பதிவு எண். M. 6331 ★ தொலைபேசி 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ.,எம்.பி.

மலர் : 19] சென்னை : மார்கழி 13 (28—12—71) செவ்வாய் வெளியூர் : மார்கழி 14 (29—12—71) புதன் [இதழ் : 163

வங்க தேச அங்கீகாரம்

பல நாடுகளின் விருப்பம்

புதுடில்லி, டிச. 28—
பல நாடுகளும் வங்க தேசத்தை அங்கீகரிக்க உறுதி கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

ஐ. நா. அவையில் இந்தியத் தூதுக்குழு நடத்திய பேச்சு வார்த்தையின் பயனாக, பல நாடுகளும் அங்கீகாரம் தர விரும்பும் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

மாபெரும் சமூகப் புரட்சியை உருவாக்கியது தி. மு. க.

தனிச் சிறப்புமிக்க முதல்வராகத் திகழ்கிறார் கலைஞர்

மத்திய அமைச்சர் கே. அனுமந்தையா மனந்திறந்த பாராட்டு

தமக்கும்—கழகத்துக்கும் உள்ள நெடுநாள் தொடர்பு குறித்து விளக்கம்

மதுரை, டிச. 28—

"திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால், நீண்ட நெடு நாட்களாக ஒரு தனி மதிப்பை நான் வைத்திருக்கிறேன்; வேறு ஒரு கட்சியைச் சார்ந்தவன் என்ற காரணத்தினால், அது சிலருக்குப் புதிராக உள்ளது; 1967 தேர்தலுக்குப்பின், அது வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்துவிட்டது.

"தி. மு. கழகம், அதிகாரத்தை மேல்மட்டத்திலிருந்து சாதாரண மக்களுக்கு மாற்றியதுதான் — அதன் மாபெரும் வெற்றியின் இரகசியமாகும்!

"அது ஒரு பெரிய சமூகப் புரட்சியை ஏற்படுத்தியது; மூடப் பழக்க வழக்கங்களிலிருந்து மக்கள் மனத்தை விடுதலை செய்தது!

"அது வெறும் அரசியல் கட்சியல்ல — மக்கள் மனத்தை மாற்றிய மாபெரும் இயக்கமும் ஆகும்!

"அதன் தலைவர் கருணாநிதி, தனிச் சிறப்பு மிக்க முதல்வராகக் கருதப்படுகிறார்; எங்களைப் போன்ற சாதாரண முதல்வரல்ல அவர்!

"1967 தேர்தலுக்குப்பின் இந்தியத் துணைக்கண்டத்தில், அரசியல் அமைதி இல்லாத நிலை ஏற்பட்டது; அப்போது இந்திரா காந்தி தலைமையில் உள்ள எங்கள் கட்சிக்கு உறுதுணையாக இருந்து — ஒரு நிலையான அரசு ஏற்பட தி. மு. கழகமும் — அதன் தலைவர் கருணாநிதியும் உதவினர்.

"தி. மு. கழகத்திற்கும் — இந்திரா காங்கிரசுக்கும் இடையேயுள்ள நட்பு எப்போதும் நிலைத்திருக்க வேண்டும் என்பதே என்னுடைய ஆழ்ந்த விருப்பமாகும்"

என்று, மத்திய இரயில்வேத் துறை அமைச்சர் திரு. கே. அனுமந்தையா அவர்கள் மனந்திறந்து கூறினார்.

மதுரை மாநகராட்சிமன்றச் சார்பில மத்திய அமைச்சர் அனுமந்தையாவுக்கு வரவேற்பு அளிப்பும், தமிழக முதல்வர் கலைஞரிடம் பாதுகாப்பு நிதியளிப்பும், நேற்று மதுரை சங்கரதாஸ் கலையரங்கில நடைபெற்றது.

நிகழ்ச்சிககு மேயர் எஸ். முத்து தலைமை வகித்தார்.

அமைச்சர்கள் எஸ். ஜே. சாதிக் பாட்சா, ஓ. பி. இராமன், மற்றும் சட்டமன்ற — நாடாளுமன்ற உறுப்பினர்களும கலந்துகொண்டனர்.

திரு. அனுமந்தையா விழாவுக்கு வந்தவுடன, முதல்வர் கலைஞர் அவரை வரவேற்றார்; இருவரும் ஆரத் தழுவிக்கொண்டனர்.

மதுரையின் புகழ்

வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் திரு. அனுமந்தையா மேலும் கூறியதாவது :—

"புகழ்பெற்ற நகரம் மதுரை; தமிழகத்தில மட்டுமல்லாமல இந்திய வரலாற்றிலேயே புகழ் பெற்ற நகரமாகும்.

தமிழகத்தில் சென்னை தலைமையகமாக இருந்தாலும், மதுரைதான் தமிழகத்தின் இதயமாக இருக்கிறது.

அத்தகைய பழம் பெரும் பெருமை வாய்ந்த மதுரை மாநகர் எனக்குத் தரும் வரவேற்பு பெருமை அளிக்கத்தக்க ஒன்றாகும்; அதிலும், உங்கள் முதல்வர் இந்த விழாவில் பங்கேற்றிருப்பது மேலும் உற்சாகம் தரத்தக்கதாகும்.

மதுரை மாநகரம் மிகவும் சுத்தமாக இருக்க வேண்டுமென விரும்புகிறேன்.

இங்குள்ள மீனாட்சியம்மை ஆலயம், இந்தியாவிலேயே தலைசிறந்த புராதனமான ஆலயம்.

இமயத்திலிருக்கின்ற சிவன் தெற்கே — இங்கே வந்து மீனாட்சியம்மையைத் திருமணம் செய்துகொண்டார்; இதன்மூலம், நம் தாயகத்தில் முதன்முதலாகக் கலப்புத் திருமணம் (அப்போதே) நடந்திருக்கிறது என்பது தெரிகிறது!"

வங்க தேசத்தில் உள்ள இந்தியப் படை

25,000 பேர் திரும்பி வருவர்

போர்க்கைதிகளைக் கொணரும் வேலை தொடர்கிறது

டாக்கா, டிச. 28—

"வங்க தேசத்திலிருந்து 25,000 இராணுவத்தினர் திரும்பப் பெறப்படுவர்; எனினும், கணிசமான பகுதியினர் வங்க தேசத்தில் இருப்பர்"

என்று இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் மானெக் ஷா தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"பாகிஸ்தான் போர்க் கைதிகள் நாளொன்றுக்கு 3,000 பேர் வீதம் கப்பலில் இந்தியாவுக்குக் கொண்டுவரப்படுவர்.

"சனவரியிலிருந்து நாள்தோறும் 10,000 பேர் வீதம் கொண்டு வரப்படுவர்."

வெள்ளத்தில் மாண்டோர் குடும்பங்கட்கு ரூ. 25,000

முதலமைச்சர் நிதியிலிருந்து அளிக்கப்படும்

மதுரை பொதுக்கூட்டத்தில் கலைஞர் அறிவிப்பு

போரில் உயிரிழந்தோர் அனைவருக்கும் வீரவணக்கம்

மதுரை, டிச. 28—

'போர்முனைக்குச் சென்றால் ஆபத்து வருமென்று தெரிந்தும், துணிந்து சென்று போரிட்டு உயிர்நீத்த போர் வீரர்கள் அனைவருக்கும் என் வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஆபத்து வராது — என்று கருதி, வைகை ஆற்றில் குடிசை போட்டுக் கொண்டிருந்த 40 ஏழைக் குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு — அவற்றில் உயிரிழந்தோருக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறேன்.

"மாவட்ட ஆட்சித் தலைவர், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ 4 இலட்சம் செலவு செய்திருக்கிறார் என்றாலும், உயிரிழந்தோரின் குடும்பங்களின் துயர் தணிக்க முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 25,000 அளிப்பதாக அறிவிக்கிறேன்"

என்று முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், நேற்று மதுரை தமுக்கம மைதானத்தில் நடைபெற்ற இந்திய தேசப் பாதுகாப்பு நாள் — வங்க தேச வெற்றி விழாக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

கூட்டத்திற்கு மதுரை மேயர் எஸ். முத்து எம்.எல்.சி. தலைமை தாங்கினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் இலட்சுமிகாந்தன் பாரதி வரவேற்றார்.

பாதுகாப்பு நிதிக்கு முதல் தவணையாக ரூ. 30 இலட்சம, முதல் அமைச்சர் கலைஞரிடம் வழங்கப்பட்டது.

கூட்டத்தில் வலது கம்யூனிஸ்டுக் கட்சி சார்பில கே. டி. கே. தங்கமணி எம்.எல்.ஏ., சோஷலிஸ்டுக் கட்சி சார்பில தங்கையா பூபதி, தமிழரசுக் கழகச சார்பில் மாரியப்பன, முஸ்லிம லீக் சார்பில் ஷெரீப், இடது கம்யூனிஸ்டு சார்பில் பாலசுப்பிரமணியம, சுதந்தரக் கட்சி சார்பில் இராமகிருஷ்ணன், பார்வர்டு பிளாக் சார்பில் கந்தசாமி எம்.எல்.ஏ., பழைய காங்கிரசு சார்பில் சிதம்பர முதலியார், தமிழ்நாடு பழைய காங்கிரசுத் தலைவர் கக்கன், இந்திரா காங்கிரசைச் சேர்ந்த ஆர்.வி.சாமிநாதன் எம்.பி. என். ஜி. ஓ. சங்கச் சார்பில் டி.கே. பரதன ஆகியோர் பேசினர்.

பின்னர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அரியதோர் உரையாற்றினார். (பேச்சு விவரம் பின்னர்)

இதுவரை ரூ. 1,16,00,000

பாதுகாப்பு நிதிக்கு மாவட்டங்களின் காணிக்கை

சென்னை, டிச. 28—

இந்தியப் பாதுகாப்பு நிதிக்கு மக்களிடமிருந்து நன்கொடையாக ரூ. 5-கோடியும் – சிறப்புப் பரிசுச் சீட்டு மூலம் ரூ. 5 கோடியும் திரட்டத் திட்டமிடப்பட்டிருப்பது தெரிந்ததே.

நன்கொடை வசூலில் ஒவ்வொரு மாவட்டமும் போட்டி போட்டுக்கொண்டு ஈடுபட்டுள்ளன; இதுவரை ரூ. 1,66,00,000 திரட்டித் தந்துள்ளன.

மாவட்ட வாரியாக விவரம் வருமாறு :—

சென்னை	ரூ.	7,50,000
மதுரை	ரூ.	33,00,000
தென்னாற்காடு	ரூ.	15 50,000
தஞ்சை	ரூ.	15,00,000
கோவை	ரூ.	10,00,000
திருச்சி	ரூ.	10,00,000
நீலகிரி	ரூ.	6,00,000
கன்னியாகுமரி	ரூ.	6,00,000
சேலம்	ரூ.	4,00,000
இராமநாதபுரம்	ரூ	3,00,000
நெல்லை	ரூ.	2,00,000
செங்கற்பட்டு	ரூ.	2,00,000
வடஆற்காடு	ரூ.	2,00,000
ஆக மொத்தம்	ரூ	1,16,00,000

குடும்பநலத்திட்ட இருவாரவிழா
29.12.1971 மாலை 6-மணிக்கு
சென்னை வண்ணையம்பதி இராபின்சன் பூங்கா பள்ளித்திடலில்
தமிழ்நாடு முதல்வர்
மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அவர்கள்
நிறைவு விழாச் சொற்பொழிவு ஆற்றுவார்
மாநகராட்சி மேயர்
திருமதி காமாட்சி செயராமன்
தலைமையேற்பார்
திரு. மு. வேதாசலம், எம். எல். ஏ., மற்றும் பலர் கலந்து கொள்வர்
அனைவரும் வருக!

அண்ணாவின் இதயம் கலைஞரிடம்!

"அமெரிக்காவின் சில கல்வி நிபுணர்களுடன் மதிய உணவு அருந்தினர் — கலைஞர்; 'மாணவன் வருங்காலத்தைச் சந்திப்பதற்கு ஏற்றவாறு கல்வித் திட்டம் அமைந்திருப்பதாகக் கூறுகிறீர்களே — அதற்கு ஓர் உதாரணம் கொடுக்க முடியுமா?' என்று கேட்டார் கலைஞர்.

"அந்தக் கல்வி நிபுணர், ஒரு கணம் அதிர்ந்து போனார் — ஏன் — அருகிலிருந்த எல்லோரும்தான்.

"விஷயங்களைச் சும்மா கேட்டுக்கொள்ளாமல் எல்லாவற்றையும் — அதன் அடி ஆழம்வரையில் சென்று துருவும் அவர் மனோபாவம் என்னைப் பிரமிப்படையச் செய்தது.

"நான் கவனித்த பல உரையாடல்களிலும், நடைமுறைக்கு ஏற்றவாறு சிந்திக்கும் அவருடைய மனோபாவத்தைக் கண்டேன்; யேல் பல்கலைக்கழகத்தில் அண்ணா அவர்கள், சில பேராசிரியர்களது கேள்விகளைத் தனது பதிலினால் திணறவைத்த அழகுதான் என் நினைவுக்கு வந்தது!

"அவரது சிரித்த முகமும், எளிதாக எல்லோருடனும் பழகும் பண்பும் — பரிவும், அவரது கரகரத்த குரலும், எனக்கு அண்ணாவைத்தான் திரும்பத் திரும்ப ஞாபகமூட்டின; அவர் பேசிய 'டேப்'பைப் போட்டுவிட்டு ஒருகணம் கண்ணை மூடிக்கொண்டால், அண்ணாவின் குரல் — அதே கருத்துக்கள் பொங்கிவருவதாக ஒரு பிரமை ஏற்பட்டது; நானே ஒரு சமயம் கலைஞருடன் வந்தவர்களிடம்போய், 'அண்ணா உள்ளே இருக்கிறாரா?' என்று தலைப்போய்க் கேட்டுவிட்டு — பின் சிரித்துவிட்டுத் திருத்திக்கொண்டேன்.

"கலைஞர் அன்புடன் கையெழுத்திட்டு அளித்த 'கவியரங்கில் கலைஞர்' என்ற கவிதைப் புரட்டுகிறேன்; அதில்,

"......நீ இருக்குமிடம் தேடியான் வரும்வரையில்
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா!
நான் வரும்போது கையோடு கொணர்ந்து — அதைத
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா!"

என்று கண்ணீர் சிந்துகிறது — கலைஞரின் கவிதை; 'கலைஞரிடம் இருப்பது அண்ணாவின் இதயந்தானே — அண்ணா அதை இரவல் தான் கொடுத்திருக்கிறாரோ' என்று நமக்கு இப்போது உண்மையான சந்தேகமே எழுகிறது!"

—'ஆனந்த விகடன்' இதழில், 'அக்கரை மண்ணில் முத்தமிழ்க் கலைஞர்' என்ற தலைப்பில் டாக்டர் எஸ். உதயமூர்த்தி எழுதியுள்ள கட்டுரையிலிருந்து.

ரூ. 10 கோடி செலவில் ஓசூரில் பால் பண்ணை

சத்துணவு வழங்கும் திட்டம் விரிவாக்கப்படும்

திருவாரூரில் முதலமைச்சர் அறிவிப்பு

திருவாரூர் டிச. 28

"ஓசூரில் ரூ. 10 கோடி செலவில் பால் பண்ணை — கால்நடை வளர்ப்புக்கான திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட இருக்கிறது"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், திருவாரூர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தின் புதிய கட்டடத்தை திறந்து வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"இந்தச் சங்கத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் நண்பர் தென்னன் அவர்கள், எழிலும் எளிமையும் மிக்க கட்டடத்தைக் கட்டி முடித்திருக்கிறார்; இந்தக் கட்டடத்தைக் கட்ட திட்டமிடப்பட்டதற்குக் குறைவான தொகைக்குள் இதை அவர் கட்டி முடித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

பொதுவாக, கட்டடங்கள் மற்ற திட்டங்களைத் துவக்குகின்றபோது, திட்டமிடுவது ஒன்றாகவும் — அதுகட்டி முடிக்கப்பட்ட பிறகு செலவு அதிகமாகவும் இருப்பதுதான் வழக்கமாக இருந்திருக்கிறது; ஆனால் அதற்கு நேர்மாறாக, ரூ. 37,000-த்திற்குத் திட்டமிடப்பட்டு ரூ. 33,000 அளவிலேயே இந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.

எல்லாவற்றுக்கும் வழிகாட்டியாக இருக்கும் திருவாரூர், இப்படிக் கட்டடங்களை — திட்டமிட்ட தொகையைவிடக் குறைவான தொகையில் கட்டி முடித்திருப்பதிலும் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது.

திட்டங்களின் மதிப்பீடுகள் சில நேரங்களில் மாறுதல் அடையலாம்; தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அவைகளை ஏற்றுக்கொள்ளப்படவும்கூடும்; ஆனால் திட்டமிடும்போதே, 'இறுதியில் அது மாறும்' என்ற கருத்தில் திட்டமிடக்கூடாது.

கூட்டுறவுச் சங்கங்களினால் ஏற்படக்கூடிய பயன்கள் பாமர மக்களுக்கும் — பாட்டாளி மக்களுக்கும் — ஏழை எளியோருக்கும் கிடைத்திடத்தக்க அளவுக்கு அதன் நடைமுறையில் மாறுதல் ஏற்பட வேண்டும் என்று விரும்பினேன்; அதன்படி ஏற்பட்ட மாறுதலின் பயனாக, மக்கள் இதன் நல்ல பயனை அனுபவிக்கிறார்கள்.

நம்நாட்டு மக்கள் அரிசி உணவைத்தான் முக்கிய உணவாகக் கொள்கிறார்கள்; உடலுக்கு ஊட்டச் சத்து ஏற்படத்தக்க மற்ற சத்துணவுகளை நாம் பயன்படுத்துவதில்லை; பாலைப்போன்ற ஊட்டச் சத்து மிக்க உணவுப் பொருள்களை நாம் பயன்படுத்த வேண்டும்.

ஏறத்தாழ 1,60,000 ஏழைக் குழந்தைகளுக்கு மத்திய அரசு உதவியுடன் சத்துணவு வழங்கும் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது; இதற்காக அரசு ரூ. 66 இலட்சம் செலவிடுகிறது.

இத்திட்டத்தின் அடிப்படையில் மூன்று வயதிற்கு உட்பட்ட ஏழைக் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது; இதனை மேலும் ஓர் இலட்சம் மக்கள் கொண்ட பகுதியில் உள்ள ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கக்கூடிய அளவில் விரிவுபடுத்தியாக வேண்டும்; அதற்கான ஆக்கப்பூர்வமான வேலையில் ஈடுபட்டாக வேண்டும்; இதனை தமிழக அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறது; இது தொடர்பாக மத்திய அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தினேன்.

தமிழ்நாட்டில் ஓசூரில் ரூ. 10 கோடி அளவில் பால் பண்ணை — கால்நடை வளர்ப்புக்கான திட்டம்பற்றி அவரிடம் பேசினேன்; வெகு விரைவில் அத்திட்டம் வரப்போகிறது.

இத்தகைய திட்டங்கள் எல்லாம் சென்னைக்கு மட்டுமல்ல — பல்லாயிரக்கணக்கான கிராம மக்களும், மாடுகள் — கால்நடைகள் வளர்ப்போரும் பயன்பெறத்தக்க அளவில்தான் இத்தகைய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வில் இத்தகைய திட்டங்களால் நிம்மதி ஏற்படவேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கையாக இருக்கிறது."

புலவர்கட்கு வேண்டுகோள்

"இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்குமிடையே போர் மூண்டு, கிழக்கு வங்கம் பாகிஸ்தான் பிடியிலிருந்து விடுபட்டு இந்தியப் படைகள் வெற்றிக் கொடி நாட்டியுள்ள செய்தி நம் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியே ஆயினும், மேற்குப் பாகிஸ்தானில் யாகியாகானின் போர் வெறி இன்னும் அடங்கிய பாடில்லை.

"எனவே, நம் பேச்சும் மூச்சும் — எழுத்தும் செயலும் அரசுக்கு ஆதரவும், எழுச்சியும் ஊட்டும் வகையில் அமைதல் வேண்டுமெனக் கருதி, அடுத்து வெளிவரவிருக்கும் 'செந்தமிழ்ச் செல்வி' இதழினை 'போர் முரசு மலர்' என்ற பெயரில் கழகம் வெளியிட எண்ணியுள்ளது.

இம்மலரில் கவியாற்றல் மிக்க புலவர்களின் எழுச்சியூட்டும் ஆர்ப்பாட்டப் போர்ப் பாட்டுகள் இடம்பெற வேண்டும் என்பது கழகத்தின் நோக்கமாகும்.

இந்நோக்கத்திற்கு ஆக்கமளிக்கும் வகையிலும் — அரசுக்கு ஆதரவு தரும் முறையிலும் — மக்கட்கு எழுச்சியூட்டும் விதத்திலும் 10 பாடல்கட்கு மேற்படாமல், 31—12—71-க்குள், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக சென்னைக் கழக அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு தமிழ்க் கவிஞர்களை 'செல்வி' இதழாசிரியர் திரு. வ. சுப்பையா பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தீண்டாமை ஒழிப்புக்குப் புதிய சட்டம்

டில்லி அரசு முடிவு

புதுடில்லி, டிச. 24—

தீண்டாமைக் குற்றத்துக்குக் கடும் தண்டனை விதிக்க வகை செய்யும் சட்டத்தைக் கொண்டு வருவது என்று மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில், 'தீண்டாமையை ஒழிக்கத் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று தீர்மானிக்கப்பட்டது.

"தீண்டாமைக் குற்றத்துக்குத் தண்டனை விதிக்கும் சட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கிறது; இப்போழுது இந்தக் குற்றத்துக்கு மேலும் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும்" என்று அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசனை கூறப்பட்டது.

இதையொட்டி, முன்பு உள்ள சட்டத்தைத் திருத்திப் புதிய சட்டம் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது.

தீண்டாமை பற்றி இளையபெருமாள் குழு அளித்த அறிக்கையை யொட்டி இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அமெரிக்காவுக்கு மூக்கறுப்பு

வாஷிங்டன், டிச. 24—

ஐந்து கோடி டாலர் (ரூ. 3 75 கோடி) மதிப்புள்ள இரண்டு கடன்களை உலக பாங்கியின் துணை அமைப்பான சர்வதேச மேம்பாட்டுச் சங்கம் இந்தியாவுக்கு அளித்துள்ளது.

அமெரிக்க அரசு திரை மறைவில் இந்தக் கடனுதவிக்கு எதிர்ப்புத் தெரிவித்தது.

இந்தியா — பாகிஸ்தான் துணைக் கண்டத்தில் இப்பொழுதுள்ள கண்கூடான உண்மை நிலையை அதிபர் நிக்சன் ஏற்கும் வரையில், கடனுதவியைத் தள்ளிப்போட வேண்டும் என்றயோசனை உலக பாங்கியின் தலைவர் மக்நமாராவுக்கு தரப்பட்டது; ஆனால் அமெரிக்க அரசின் இந்தக் குறுக்கீட்டை அவர் மதிக்கவில்லை; இரண்டு கடன்களுக்கும் அங்கீகாரம் அளிப்பதற்குத் தாமே வழிசெய்தார்.

10 ஆண்டுச் சலுகைக் காலம் உட்பட 50 ஆண்டுக் காலத்துக்கு இரு கடன்களும் இந்திய அரசுக்கு அளிக்கப்படும்; அவற்றுக்கு வட்டியில்லை; ஆனால் சுமார் ஒரு சதவிகித சேவைக் கட்டணம் வசூலிக்கப்படும்.

சீனு போக்கு மாறலாம்?

7.50 கோடி வங்க தேச மக்களைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை

பாகிஸ்தானைக் கண்மூடித்தனமாக ஆதரித்ததற்குக் காரணம் என்ன?

புதுடில்லி, டிச. 27—

வங்க தேசம் குறித்து சீனா கடைபிடிக்கும் கொள்கையை, விரைவிலேயே அது மாற்றிக் கொள்ளக்கூடும் என்று இந்திய அரசு கருதுகிறது.

வங்க தேசத்தில் இதுவரை இயங்கிவந்த சீனத் தூதரகம் மூடப்படுவிட்டிருப்பினும் துணைக்கண்டத்தில் ஏற்பட்டுவிட்ட புதிய அரசியல் மாறுதல்களைச் சீனா நீண்ட நாட்களுக்கு உணராமல் இருக்க முடியாது என்று கூறப்படுகிறது.

வங்க தேசப் பிரச்சினையில் பாகிஸ்தானைக் கண்மூடித்தனமாக ஆதரித்துவந்த நிலையில், தொடர்ந்து வங்க தேசத்தில் தூதரகம் இயங்கிவருவது, சீனாவுக்கே இக்கட்டான நிலையைத் தோற்றுவித்திருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது.

வங்க தேசம் உருவாகிவிட்ட இந்தச் சூழ்நிலையில், சீனாவின் குற்றச்சாட்டுக்களுக்கும் பதில் கூறுவதோ — எடுத்த நடவடிக்கைகளுக்காகப் பாகிஸ்தானிடம் காரணம் கூறிக்கொண்டிருப்பதோ பொருளற்றது என்றே கருதப்படுகிறது. இதன் மூலம் ஏழரைக் கோடி வங்க தேச மக்களின் ஆதரவைப் பெறுவதும் இழப்பதும் சீனாவின் பொறுப்புக்கே விடப்பட்டிருக்கிறது.

நிலைமையை உணர்ந்து விரைவிலேயே வங்க தேசத்துடன் சீனா உறவு வைத்துக்கொள்ள முன்வரும் என்றே இன்னமும் இந்தியா நம்பி வருகிறது.

இது எப்படியிருந்தாலும், இந்தியா — சீனா உறவு சீர்படுவதில், இது எதுவும் குறுக்கே இருக்க வேண்டியதில்லை என்றும் இந்தியா கருதுகிறது; ஆனால், முழு அளவுக்குத் தூதரக உறவு ஏற்படுத்துவது குறித்தோ, வழக்கமான வணிகத் தொடர்பு ஏற்படுத்துவது குறித்தோ உடனடியான நடவடிக்கைகள் எடுக்க இந்தியா விரும்பவில்லை.

சீனாவுடன் உறவைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தீவிரமாக வற்புறுத்தி வந்தவர்கள்கூட, இப்போது அதுபற்றி அவசரப்படுவதில் பொருளில்லை என்று கருதுகிறார்களாம்.

வங்க தேசத்தை சீனா எதிர்த்து வருவதற்குக் காரணம், இந்தியாவிடம் உள்ள அச்சமே காரணம் எனக் கருதப்படுகிறது. வங்க தேசப் பிரச்சினை காரணமாக ஆசியாவில் இந்தியாவின் மதிப்பு உயரக்கூடாது என்று சீனா கருதுகிறது.

தன்னைப்போலவே இந்தியாவும் ஒரு பெரிய நாடு — எல்லாவிதமான வசதிகளும் அதனிடம் இருக்கின்றன என்ற உண்மையைச் சீனா அறியும்; இப்படிப்பட்ட இந்தியாவின் செல்வாக்கு வளருவதைச் சீனாவால் சகிக்க முடியவில்லை.

இதே காரணம்தான், பாகிஸ்தானைக் கண்மூடித்தனமாக ஆதரிப்பதற்கும், வங்க தேசப் பிரச்சினையில் தவறான கொள்கையைக் கடைபிடிப்பதற்குமாகும் என்று கருதப்படுகிறது.

சீனாவுடன் பூட்டோ நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டதற்காகத்தான், அப்போதைய அமெரிக்க அதிபர் ஜான்சனின் நிர்ப்பந்தம் காரணமாக அயூப்கான், பூட்டோவைப் பதவி நீக்கம் செய்தார் என்பதையும் சீனா நன்கு அறியும்.

இந்த இரு நாடுகளும் பூட்டோவை இப்போது ஆதரித்துவருவதில் தத்தம் மனச்சாட்சியை வஞ்சிப்பதாகவே இருக்கவேண்டும்; ஆனால் இவர்களின் கொள்கை, வங்க தேச மக்களுக்கா — இந்திய மக்களுக்கா — அல்லது மேற்குப் பாகிஸ்தான் மக்களுக்கா — யாருக்குக் கெடுதல் செய்யப்போகிறது என்பதை, பூட்டோ செயல்படுவதிலிருந்தே தெரிந்துகொள்ள வேண்டும்.

வலிமை மிக்க நாடாக நமது நாடு

தன்னிறைவு பெற்றுத் திகழப் பாடுபடுவோம்

கோவைப் பொதுக்கூட்டத்தில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். சூளுரை

கோவை, டிச. 28—

"உலக நாடுகள் போற்றும் வண்ணம் நம் நாடு வலிமையுள்ள நாடாக மாறியிருக்கிறது; இந்த வலிமை வளர வேண்டும்; 'எந்த நாட்டின் உதவியும் இல்லாமலே நம்மால் தன்னிறைவுள்ள ஒரு நாடாக இந்நாட்டை ஆக்க முடியும்' என்று நாம் நிறைவேற்றிக் காட்ட வேண்டும்; அத்தகைய தன்னிறைவு பெற நாம் ஊக்கமுடன் பாடுபட வேண்டும்."

என்று கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள், கோவையில் நடந்த வங்க தேச விடுதலை விழாவில் பேசுகையில் கேட்டுக்கொண்டார். அவர் மேலும் பேசியதாவது:—

"வங்க தேச வெற்றி விழாவாகவும் — பாதுகாப்பு நிதி வசூல் விழாவாகவும் இவ்விழா நடைபெறுகிறது; இவ்விழா, 'சுதந்தரமும் சத்தியமும்தான் வெற்றி பெறும்' என்பதைக் கொண்டாடும் விழாவாகும்.

'எந்த நாடும், எந்த நாட்டுக்கும் அடிமையில்லை; எந்த மனிதனும் எந்த மனிதனுக்கும் அடிமையில்லை' என்று தி. மு. கழகம் ஒப்புக்கொண்டுள்ள கொள்கையின்மூலம் எதிரியை முறியடிக்க இந்தியா துணிந்து நின்றபோது, ஒரே கொடியின்கீழ் நாட்டைக் காக்க நாமெல்லாம் ஒன்றுபட்டு நின்றமைக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் வெற்றிக்காக — நாமெல்லாம் இங்கு கூடியிருப்பதில் பெருமையடைகிறோம்.

நம் நாட்டின் மானத்தையும் — நமது மண்ணையும் காக்க அஞ்சா நெஞ்சுடன் சமர்புரிந்த வீர இராணுவத்தினர் எத்தனைப் பேர் உயிர் துறந்தனர் — எத்தனைப் பேர் காயமுற்றனர் என்று எண்ணும்போது, நம் உள்ளம் அதற்கென்று நன்றி செய்யும் கடமைக்கு உட்படுகிறது!

வீர மரணம் எய்திய தாயின் பிள்ளை, இனி மீண்டும் வரப்போவதில்லை!

மாண்டுபோன கணவன், தன் மனைவியின் கண்ணீரைத் துடைக்க மீண்டும் வரப்போவதில்லை!

இதையெல்லாம் அறிந்தும், போர் வந்தவுடன் அவர்கள், தங்கள் உயிரை இலட்சியம் செய்யாமல் — இந்த நாடு எதிரியின் கையில் விழாமல் காப்பாற்ற முனைந்தார்கள் என்பதைத்தான் இப்போரில் நாம் பார்த்தோம்!

'என் தங்கையைப் படிக்க வையுங்கள்; என் மகனை வீரனாக்குங்கள்; என் தாயை வாழ வையுங்கள்' என்றுதான் அவர்கள், போர்க் களத்தில் இருந்தவாறு — சாவின் முனையில் வீழ்ந்தபோது கேட்டுக்கொண்டிருக்கிறார்களே தவிர, 'போர்' என்றதும், உறுதி இழந்து பலவீனப்பட்டுவிடவில்லை!

வங்க தேசத்தின் விழிப்புணர்ச்சி எப்படியிருந்தது — அதற்கு எப்படி உதவ முன்வந்தோம் — எதிரியின் செயல் இப்போரில் எப்படியிருந்தது — என்பதையெல்லாம் அறிவீர்கள்.

சின்னப்பன் என்ற வீரர், 16-ந் தேதி ஒரு கடிதம் எழுதியிருந்தார்; அதிலேகூட, 'நான், எதிரியின் பகுதியில் 50 கிலோ மீட்டர் உள்ளே புகுந்திருந்து இக்கடிதத்தை எழுதுகிறேன்' என்று எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்தை எழுதும்போது திடீரென்று 4 ஜெட் விமானங்கள் குண்டு போட்டதாகவும் — அதைச் சமாளித்துவிட்டே 15 நிமிடங்களுக்குப் பிறகு மீண்டும் அக்கடிதத்தை எழுதுவதாகவும் தன் கடிதத்தை அவர் தொடங்கியிருந்தார்.

அத்தகைய வீரர்கட்கு நாம் ஆற்றுகின்ற உதவிகள், நம்மை நாமே காத்துக்கொள்வதற்குத்தானே தவிர, வேறெதற்கும் அல்ல!

இன்று நம் நாடு அடைந்த வெற்றியால், உலக மன்றத்தில் நமக்கு ஏற்பட்டுள்ள மதிப்புக்கும் — புகழுக்கும் காரணமாக இருப்பவர்கள் நம் இராணுவத்தினர் என்று நினைக்கும்போது, நம் நெஞ்சம் வும் பூரிப்படைகிறது!"

வருந்துகிறோம்

சென்னை 86-வது வட்ட முன்னாள் பொருளாளரும் — தோழமைக் கழகச் செயலாளரும் — அண்ணா நினைவு மன்றத் தலைவருமான கோ. வரதன், டிச. 14-ம் நாளன்று இயற்கையெய்தினார். வட்ட தி.மு.க. சார்பில் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

மாயூரம் நகர தி. மு கழக உறுப்பினரும் — ஆசிரியர் வேலாயுதம் மன்றப் பொருளாளரும் — ஜெமினி அச்சக உரிமையாளருமான ஆர். நாராயணசாமி அவர்களின் அன்னையார் 17—12—71 அன்று செம்பனார்கோவிலில் இயற்கையெய்தினார்; செய்தியறிந்ததும், என். கிட்டப்பா எம்.எல் ஏ., ஜி. கே. மூர்த்தி, கோ. இரத்தினவேலு, எம். அப்துல் ஹாதி, பி குஞ்சிதபாதம் மற்றும் கழகத் தோழர்கள் செம்பனார் கோவில் சென்று மறைந்த அம்மையாருக்குத் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தினர்; அன்னையை இழந்து வாடும் நாராயணசாமி அவர்களுக்கும் — அவர்தம் குடும்பத்தினருக்கும் மாயூரம் ஆசிரியர் வேலாயுதம் மன்றச் சார்பில் ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

தமிழ்நாட்டில் 25 இரயில்வே மேம்பாலங்கள்

அடுத்த ஆண்டில் கட்ட தென் இரயில்வே முடிவு

சென்னை, டிச. 28—

அடுத்த சில ஆண்டுகளில் 83 இடங்களில் இரயில் பாதையைக் கடக்கும் சாலைகளில் மேம்பாலங்கள் அல்லது சுரங்கப் பாதைகளைப் போட ரூ 98 கோடி செலவில் ஒரு திட்டத்தை தென் இரயில்வே மேற்கொண்டுள்ளது.

இந்த 84 பணிகளில் 25 தமிழ்நாட்டில் ரூ 5 30 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

சாலையில் லெவல் கிராசிங்குகளுக்குப் பதிலாக சுரங்கப் பாதைகள் போடுவதற்காகத் தன்னுடைய பங்குக்கு 1972 — 73-ல் ரூ. 125 இலட்சம் செலவிட தென் இரயில்வே இலக்கு நிர்ணயித்திருக்கிறது.

மேம்பாலம் அல்லது சுரங்கம் பாதை அமைப்பதற்கான செலவில் பாதியை இரயில்வேக்களும், பாதியை மாநில அரசுகளும் ஏற்றுக்கொள்கின்றன; மத்திய லெவல் கிராசிங் நிதியிலிருந்து மாநில அரசுக்கு மேலும் உதவி கிடைக்கும்.

மூன்றாவது திட்ட காலத்தில் தென் இரயில்வேயில் 36 லெவல் கிராசிங்குகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள் அல்லது சுரங்கப் பாதைகள் போடப்பட்டுள்ளன; இவற்றில் 10 தமிழ்நாட்டில் இருந்தவை.

தென் இரயில்வேயில் 5,128 சாலைகளில் கிராசிங்குகள் — பாலங்கள் இல்லாமல் இருக்கின்றன; இவற்றில் 3,718 தமிழ்நாட்டிலும், 16 பாண்டிச்சேரியிலும் இருக்கின்றன.

போக்குவரத்து நிறுவனங்கள் பல்லவா — பாண்டியா

பதிவு செய்யப்பட்டு சனவரி மாதம் முதல் பணியைத் துவங்கும்

சென்னை — நாகர்கோவில் இடையே மின்னல் வேக எக்ஸ்பிரஸ்; அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் தகவல்

சென்னை, டிச. 26—

"பல்லவா போக்குவரத்துக் கார்ப்பரேஷனை சனவரி 3-ம் நாளன்று சென்னையில் முதலமைச்சர் கலைஞர் துவக்கி வைப்பார்; அதையொட்டி, சென்னை — நாகர்கோவில் இடையே புதிய மின்னல் வேக இரவுப் பேருந்து விடப்படும்."

இத்தகவலை, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் நிருபர்களிடம் கூறினார்; அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"பல்லவா — பாண்டியா போக்குவரத்துக் கார்ப்பரேஷன்கள் பதிவு செய்யப்பட்டு — அவை இரண்டும் சனவரி முதல் தேதி முதல் செயல்படத் துவங்கும்.

பல்லவா போக்குவரத்துக் கார்ப்பரேஷன், முறைப்படி சனவரி 3-ம் நாள் அன்றும், பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கார்ப்பரேஷன் சனவரி நடுவிலும் முதலமைச்சர் கலைஞரால் துவக்கி வைக்கப்படும்.

சென்னை — புறநகர்ப் பகுதிகள் — செங்கற்பட்டுவரை ஓடும் அரசாங்கப் பேருந்துகளைக் கொண்டது பல்லவா கார்ப்பரேஷன்.

மதுரையில் டி. வி. எஸ். நிறுவனத்திடமிருந்து மேற்கொள்ளப்பட்ட பேருந்துகளை நிர்வகிக்க அமைக்கப்படுவது பாண்டியன் சாலைப்போக்குவரத்துக் கார்ப்பரேஷன்.

மின்னல் வேக எக்ஸ்பிரஸ்

நெடுந்தூர விரைவுப் பேருந்துகளை வசதிமிக்க சொகுசு பஸ்களாகவிட முடிவு செய்யப்பட்டிருக்கிறது

மின்னல் வேக எக்ஸ்பிரஸ் என்ற பெயருள்ள இந்தப் பேருந்துகள் 51 சொகுசான இருக்கைகளைக் கொண்டதாக இருக்கும்.

சற்று உயரம் குறைவாக உள்ள இந்தப் பேருந்து வேகமாகச் செல்வதற்கு வசதியாக உயரம் குறைக்கப்பட்டுள்ளது.

எக்ஸ்பிரஸ் பஸ்களின் நிறமும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இப்போது சிவப்பு நிறத்தில் உள்ள இவை, இனி, பச்சையும் — வெளிர் மஞ்சளும் கலந்த வண்ணமாக இருக்கும்.

கண்டக்டர் இல்லாமலேயே ஓடுவதற்கு வசதியாக பஸ்சின் முன்புறத்திலேயே முன்சக்கரத்திற்கு மேலே நுழை வாயில் அமைக்கப்பட்டுள்ளது; இதன்மூலம், எந்தப் பயணியும் டிரைவரைத் தாண்டித்தான் பஸ்சின் உள்ளே போகமுடியும்.

தொழிற் சங்கங்கள் ஒப்புக்கொண்டால், இவற்றைக் கண்டக்டர் இல்லாத பஸ்களாகவிடலாம்.

தொழிற்சங்கத்தினருடன் பேச்சு

அரசாங்கப் போக்குவரத்துத் துறையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களுடன் நான் பேச்சுவார்த்தை நடத்தினேன்; அதற்குப் பிறகு கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன:-

1. அரசாங்கப் பஸ் போக்குவரத்துத் துறையிலும் — அமைய இருக்கும் பல்லவா போக்குவரத்துக் கார்ப்பரேஷனிலும் பணியாற்றும் தொழிலாளர்கள் — அலுவலாளர்கள், முறையே தங்களுடைய ஒருநாள் ஊதியத்தையும், முதல்நாள் ஊதியத்தையும் நாட்டுப் பாதுகாப்பு நிதிக்குக் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளனர்; இதன்மூலம் சுமார் ரூ. 2 இலட்சம் பாதுகாப்பு நிதிக்குத் தரப்படும்.
2. போக்குவரத்துக் கார்ப்பரேஷன் அமைப்புக்குத் தொழிற்சங்கத் தலைவர்கள் ஒப்புதல் தெரிவித்து ஏற்றுக்கொண்டனர்.
3. தொழிற்சங்கங்களுக்கு இப்போது வழங்கப்பட்டுள்ள அங்கீகாரம் கார்ப்பரேஷன் நிர்வாகத்திலும் நீடிக்கும்.
4. இப்போது தொழிலாளர்களுக்கும் — அலுவலர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள சலுகைகள் — சம்பள விகிதங்கள் — வேலை முறைகள் ஆகியவை கார்ப்பரேஷன் அமைப்பில் புதிய சர்வீசு முறைகள் உருவாக்கும்வரை நீடிக்கும்.
5. அரசாங்கப் போக்குவரத்துத் துறையில் நீடிக்க விரும்புகிறார்களா அல்லது பஸ் கார்ப்பரேஷன் சார்பில் சேர விரும்புகிறார்களா என்பதைத் தொழிலாளர்களும் — அலுவலாளர்களும் மூன்று மாத காலத்திற்குள் (மார்ச் 31-ந் தேதிக்குள்) அறிவித்துவிட வேண்டும்.
6. தொழிலாளர்கள் — அலுவலாளர்கள் ஆகியோரின் தனிப்பட்ட முறையீடுகளை ஒவ்வொரு திங்கட் கிழமையும் பிற்பகல் 3 மணிமுதல் மாலை 5 மணிவரை பல்லவா கார்ப்பரேஷன் தலைவர் அல்லது நிர்வாக இயக்குநர் நேரடியாகக் கேட்டறிவார்கள்.

நமது விமானப் படையின் சாதனை

14 நாட்களில் 4,000 முறை குண்டுவீச்சு

புதுடில்லி, டிச. 27—

பாகிஸ்தானுடன் நடைபெற்ற 14 நாள் போரில் இந்திய விமானப் படை புரிந்த மாபெரும் சாதனை இப்போது தெரியவந்துள்ளது.

மேற்குப் பகுதியில் நமது விமானங்கள் 4,000 தடவை குண்டுகள் வீசியிருக்கின்றன.

பாகிஸ்தானின் 72 விமானங்களையும், 146 டாங்கிகளையும் இந்திய விமானப் படை அழித்திருக்கிறது.

மேலும், 76 சரக்கு இரயில்கள் — 3 இரயில்வே தொழிற்சாலைகள் மற்றும் இரயில் பாதைகள் — துருப்புக்கள் தங்குமிடங்கள் — பீரங்கி நிலையங்கள் போன்ற நூற்றுக்கணக்கான இடங்களையும் நமது விமானப் படை அழித்திருக்கிறது.

நமது விமானப் படையால் தாக்கப்பட்ட மூன்று எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகள் நாட்கணக்கில் எறிந்துகொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

அழிக்கப்பட்ட 72 விமானங்களில் 36 விமானங்கள் தரையிலேயே அழிக்கப்பட்டன.

கடந்த டிசம்பர் 4-ம் நாள் இந்திய விமானப் படையின் கடும் தாக்குதல் காரணமாக இரண்டு நாட்கள் பாகிஸ்தானில் செய்தித் தொடர்பே அற்றுப்போயிருந்ததாகவும் சிலர் தெரிவித்தனர்.

சுடுவதுதான் நின்றது — சண்டை ஓயவில்லை

தோற்றவர்களை உசுப்பிவிட அமெரிக்காவும்-சீனாவும் முனையலாம்

எச்சரிக்கையுடன் இருந்து எதிரியை முறியடிப்போம் — சென்னையில் நாவலர் நெடுஞ்செழியன் முழக்கம்

சென்னை, டிச. 28—

"ஆயுத வலிவையும் — ஆதிக்க வலிவையும் உடைய அமெரிக்காவும் — சீனாவும், தங்களிடமுள்ள ஆயுதங்களைக் கொடுத்து மீண்டும் பாகிஸ்தானை உசுப்பிவிடக் கூடும்; நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்; பாதுகாப்பு முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவளித்திட வேண்டும்.

"தமிழ்நாட்டில், பாதுகாப்பு நிதிக்கு ரூ 10 கோடி அளிப்பதாக உறுதி கூறியிருக்கிறோம்; ஏற்பட்டிருக்கும் செலவையும் இழப்பையும் பார்க்கும்போது இது சாதாரணத் தொகையாகும்; இத்தொகையை நாம் திரட்டித்தர எல்லோரும் ஒன்றுபட்டுப் பணியாற்ற வேண்டும்"

என்று, கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 26-12-71 அன்று சென்னைக் கடற்கரையில் நடந்த வங்காள தேச வெற்றி விழாக் கூட்டத்தில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"இந்தியாவின் சனநாயகத்துக்கும் — ஒருமைப்பாட்டுக்கும் — மனிதாபிமானத்துக்கும்கிடைத்த வெற்றியை நாம் கொண்டாடுகிறோம்.

ஏழரைக் கோடி மக்களுக்கு — அவர்கள் இழந்திருந்த சுதந்தரத்தை — பதினான்கு நாட்களில் மீட்டுத் தந்ததென்பது உலக வரலாற்றில் இதுவரை நிகழ்ந்திராத ஒன்றாகும்.

இந்தப் போர் நமக்காக நாம் நடத்திக்கொண்ட போர் அல்ல; ஏழரைக் கோடி மக்களின் துன்ப துயரங்களைப் போக்கிட நாம் நடத்திய போர் ஆகும்.

இப்போது, சுடுவதுதான் நின்றிருக்கிறதே தவிர சண்டை நிறுத்தப்படவில்லை.

'பழிக்குப் பழி வாங்குவேன்' என்கிறார் பூட்டோ!

அவமானத்துக்கு ஆளான அமெரிக்கா அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது!

'பெருமூச்சு வாங்க இது நேரமல்ல' என்று கூறியிருக்கிறார் — தலைமையமைச்சர் இந்திரா காந்தி!

வங்க தேச மக்களின் நலிவைப் போக்க நாம்தான் உதவியாக வேண்டும்.

இந்தப் போரினால், நம் அரசுக்கு ஏற்பட்ட சுமையைத் தாங்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

அடிபட்ட பாகிஸ்தான் வாளாவிருக்காது!

உலக அரங்கில் இந்தியாவைத் துச்சமாகவும் — ஏளனமாகவும் — இழிவாகவும் எண்ணியிருந்த நிலை மாறி, இன்று பெருமையோடு எண்ணத்தக்க அளவுக்குத் தலைமை மாறியிருக்கிறது!

நமது முப்படை வீரர்களும் நம் அனைவருடைய பாராட்டுதலுக்கும் உரியவர்கள்!

நமது நாட்டை — அதன் உரிமையை — சுதந்தரத்தைப் பாதுகாக்கத் தங்கள் இன்னுயிரை ஈந்த வீரர்களுக்கு நாம் வீர வணக்கம் செலுத்துகிறோம்.

அவர்களது குடும்பத்தாருக்கெல்லாம் ஆழ்ந்த அனுதாபத்தை ஆறுதலைத் தெரிவிக்கிறோம்.

கொடியவர்கள் மீண்டும் வந்தால் எதிரடி கொடுத்து — அவர்களை வீழ்த்தப் போதிய வலிமையை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம்!

'பழிக்குப் பழி வாங்குவேன்' என்றும், 'வெற்றியில் இந்தியா திளைத்திருக்க வேண்டாம்' என்றும், 'பாகிஸ்தான் மக்களது ஆதரவு இருந்தால் இமயம்போல் உயருவேன்' என்றும் பூட்டோ கொக்கரித்தாரே — எந்தத் தைரியத்திலே பூட்டோ இப்படிப் பேசுகிறார்! அமெரிக்காவும் — சீனாவும் தனக்கு ஆதரவாக வரும் என்ற எண்ணம்தான்!

ஒரு சாதாரண மனிதனும்கூட அவமானத்துக்கு ஆளானால், பழி வாங்கத் துடிப்பான்!

சாதாரண ஊராட்சித் தேர்தலானாலும் ஒருவன் தோற்றால் தோற்றவனைவிட அவனைநிறுத்தி வைத்தவன் பழிவாங்கத் துடிப்பதைப் பார்க்கிறோம்!

தமிழர்களாகிய நாம், வீரத்தையும் புகழையும் தொன்றுதொட்டு நிலைநாட்டி வருகிறோம்; இதை எண்ணி நாம் பூரிப்பும் பெருமையும் அடைகிறோம்.

சென்னையில் அண்மையில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் தளபதி ஒருவர் பேசுகையில், 'இந்திய இராணுவத்தில் தமிழ்நாட்டினரே அதிக சதவிகிதம் பேர் உள்ளனர்' என்று தெரிவித்தபோது பெருமகிழ்ச்சி யடைந்தோம்.

தமிழ் வீரர்களில் 32 பேர் களத்தில் தங்கள் இன்னுயிரை நல்கியிருக்கின்றனர்.

தமிழக அரசு, இந்தப் போர் வீரர் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் பல்வகை உதவிகளை அறிவித்துள்ளது; இதை நிறைவேற்றும் பணியில் அரசு ஈடுபட்டுள்ளது; மக்களும் அவரவர் பங்கை ஆற்றிட வேண்டும்.

பதுங்கிக் கிடக்கும் பகை புதிய வலிவோடு மீண்டும் தாக்குமானால், எதிரடிகொடுத்து வீழ்த்திட நாம் தயாராக இருக்க வேண்டும்.

அண்ணா அவர்கள் சொன்னதுபோல் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடும் — கடமை உணர்ந்து கண்ணியத்தோடும் — கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ள வேண்டும்."

மதுரை மாநகர் கண்ட மாபெரும் அணிவகுப்பு

முதல்வர் கலைஞருடன் மத்திய அமைச்சர் கே. அனுமந்தையா கண்டு மகிழ்ந்தார்

நாடு காக்கும் பணியில் மக்கள் காட்டிடும் உற்சாகப் பெருக்குக்குப் பாராட்டு

மதுரை, டிச. 28—

பாண்டிய நாட்டின் தலைநகரமான மதுரை மாநகரில், தேசியப் பாதுகாப்பு விழாவும் -- வங்க தேச வெற்றி விழாவும் நடைபெற்றதையொட்டி நேற்று ஊர்வலம் நடைபெறறது.

இந்த ஊர்வலத்தினை, அலங்கரிக்கப்பட்ட தனி மேடை ஒன்றில் நின்று முதல்வர் கலைஞர் -- மத்திய அமைச்சர் அனுமந்தையா -- அமைச்சர்கள் எஸ்.ஜே. சாதிக் பாட்சா, ஓ.பி. இராமன், மதுரை மேயர் எஸ். முத்து, சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்கள், முதல்வரின் துணைவியார் தயாளு அம்மாள் ஆகியோர் பார்வையிட்டனர்.

ஊர்வலத்தின் துவக்கத்தில் காவல் துறை அதிகாரிகள் மோட்டார் சைக்கிளில் அணிவகுத்துச் சென்றனர்; அவர்களை அடுத்து அலங்கரிக்கப்பட்ட யானைகள் இரண்டு பவனி வந்தன; அந்த யானையின் மேல் தேசீயக் கொடியேந்திய இரு வீரர்கள் அமர்ந்து வந்தனர்.

கொம்புகள்--பேரிகைகள் முழங்கின; ஊர்வலத்தினர் முழக்கமிட்டவாறு வந்தனர்.

அடுத்து, அலங்கரிக்கப்பட்ட டிராக்டர்கள் வரிசையாக வந்தன; அந்த டிராக்டர்களில் 'வலுச் சண்டைக்கு வந்தனர் -- வந்தவர்கள் ஒழிந்தனர்' என்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

தொடர்ந்து காவல் படையினரின் இசைக் குழுவினர் பாண்டு வாத்தியங்களை இசைத்தவாறு வந்தனர்; அவர்களைத் தொடர்ந்து உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் அடங்கிய ஏ.சி.சி. படையினர் அணிவகுத்து வந்தனர்.

அவர்களை அடுத்து, அறிஞர் அண்ணா அமைத்த சீரணியினரும், ஊர்க்காவல் படையினரும் முழக்கம் எழுப்பியவாறு அணிவகுத்து வந்தனர்.

அடுத்து, மகளிர் பேரணியினர்--மாணவிகள், ஆசிரியைகள், அலுவலகங்களில் பணியாற்றுவோர், சமூகநலத் தொண்டாற்றுவோர் அணிவகுத்து வந்தனர்.

அடுத்து, தொழிலாளர்கள் அணிவகுத்துவந்தனர்; அதற்கு ஊராட்சி -- ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் -- உறுப்பினர்கள் -- ஊழியர்கள் -- என்.ஜி ஓ.-க்கள் ஆகியோர் அணிவகுத்துவந்தனர்.

இவர்களைத் தொடர்ந்து, மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட போர்க் கப்பல் ஒன்று வந்தது; இதனுடன் வெற்றிகளைக் குவித்த 'விஜயந்தா' டாங்கி மாதிரி ஒன்று வந்தது.

இதனைத் தொடர்ந்து, நாதசுர இசைக் குழுவினர் இருந்த வண்டிகள் -- டிராக்டர்கள் வந்தன.

அடுத்து, மாணவர்கள் பேரணி -- முழக்கங்கள் பல எழுப்பியவாறு அணிவகுத்துவந்தது.

தொடர்ந்து சைக்கிள்கள் அணிவகுப்பு -- அடுத்து, கவசம் பூண்டதுபோல் அலங்கரிக்கப்பட்ட 'நாட்' விமானம் வந்தது.

இதற்கு அடுத்து, கன்னர் ஆறுமுகம், பாகிஸ்தான் சேபர் ஜெட் விமானத்தைச் சுடுவது போன்று வரையப்பட்ட காட்சி அமைந்த வண்டி வந்தது.

டி. வி. எஸ். தொழிலாளர்கள், வீர முழக்கங்களுடன் அணிவகுத்து வந்தனர்.

இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டேவந்த மத்திய அமைச்சர் அனுமந்தையா திகைத்தும் போய், மாபெரும் ஊர்வலம்' என்று ஆங்கிலத்தில் கூறினார்.

ஊர்வலத்தில் சீரணியினர் போர் முரசுகளை முரசொலித்தவாறே வந்துகொண்டிருந்தனர்.

ஊர்வலத்தின் கடைசி வண்டியில், பாகிஸ்தான் இராணுவத்தினர் இந்திய இராணுவத்திடம் சரணடைகிற காட்சி சித்தரிக்கப்பட்டிருந்தது; அததுடன் அக்காட்சியில், முதல்வர் கலைஞரின் வண்ணப் படமும் அமைக்கப்பட்டிருந்தது.

இக்காட்சியைக் கண்ட மத்திய அமைச்சர் அனுமந்தையா, மக்களோடு சேர்ந்து தானும் கை தட்டினார்.

அனுமந்தையா பாராட்டு

"இலட்சம் மக்களுக்கு மேல் அணிவகுத்துச் செல்கின்ற இந்த ஊர்வலம், சாதாரண ஊர்வலமல்ல! இதிலே கலந்துகொண்ட மக்களின் முகத்தில் ஒளிவீசும் மகிழ்ச்சியைக் கண்டேன்!

"அந்தத் திருமுகங்கள், உறுதியினையும் -- துணிவினையும் வெளிப்படுத்தின!

"நம் நாட்டு மக்கள் தேசப் பற்றும், 'வீரமும் மிக்கவர்கள் -- உலகின் எந்தச் சக்தியாலும் அவர்களைப் பணியவைக்க முடியாது என்பதற்கு இதுவே நிச்சயமான சான்றாகும்"

என்று மத்திய அமைச்சர் அனுமந்தையா, கலைஞருடன் அமர்ந்து ஊர்வலத்தைப் பார்வையிட்டபின் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (36, [illegible] தெரு, சென்னை-5), அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

பீகார் அமைச்சரவை பதவி விலகல்

பாட்னா, டிச. 27—

பீகாரில் போலா பாஸ்வான் சாஸ்திரி தலைமையில் இருந்த கூட்டு அமைச்சரவை நேற்று இராஜினாமா செய்தது.

நேற்று மாலை நடந்த அமைச்சரவையின் அவசரக் கூட்டத்தைத் தொடர்ந்து முதலமைச்சர் தமது அமைச்சரவையின் இராஜினாமா கடிதத்தை கவர்னர் டி. கே. பருவாவிடம் அளித்தார்.

சட்டமன்றத்தைக் கலைக்குமாறும் அவர் சிபாரிசு செய்தார்.

இந்திரா காங்கிரசு தலைமையிலிருந்த முற்போக்கு விதாயக் தள அமைச்சரவை 209 நாட்கள் பதவியில் இருந்தது.

நடப்பு ஆண்டு ஜூன் 2-ல் அமைச்சரவை பதவியேற்றது; 1967-ல் நடந்த 4-வது பொதுத்தேர்தலுக்குப்பின் இது 9-வது அமைச்சரவையாகும்.

பீகாரில் 1969 இடைத் தேர்தலுக்குப் பின்னர், இது 5-வது அமைச்சரவையாகும்.

போலா பாஸ்வான் சாஸ்திரி நான்காவது பொதுத் தேர்தலுக்குப் பின்னர் மூன்று தடவை பீகாரின் முதலமைச்சராகப் பதவிவகித்தார்.

பூட்டோவின் பகற்கனவு

வங்க தேசத்தை பாகிஸ்தானுடன் இணைக்க முயற்சியாம்

முஜிபுர் ரகிமானுடன் இரண்டாம் முறையாகச் சந்திப்பு

இராவல்பிண்டி, டிச. 28—

அவாமி லீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரகிமானை விடுதலை செய்வதற்கான இரகசியப் பேச்சுவார்த்தை, ரகிமானுக்கும்--பாகிஸ்தான் அதிகாரிகளுக்கும் இடையே நடைபெற்றுவருவதாகத் தெரியவருகிறது.

பாகிஸ்தான் அதிபர் பூட்டோ, ரகிமானைச் சந்தித்தும் பேசியதாக, முஜிபுர் ரகிமான் சிறையிலிருந்து வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட ஐந்து நாட்களுக்குப் பிறகு பாகிஸ்தான் வானொலி அறிவித்தது.

இது, பூட்டோவின் இரண்டாவது சந்திப்பாகுமென்றும், ஏற்கனவே கடந்த வெள்ளியன்று முதல் சந்திப்பு நடைபெற்றதாகவும் பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

"ரகிமானுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று பாகிஸ்தான் மக்கள் விரும்புகிறார்கள்" என்று பூட்டோ கூறியதாக அந்த வானொலி தெரிவித்தது.

'பாகிஸ்தான் பிரிக்க முடியாதது' என்று கூறிய பூட்டோ, 'வங்க தேச மக்கள் கைவிடப்படவில்லை' என்று அம்மக்களுக்கு உறுதி கூறியதாகவும் அது தெரிவித்தது.

இப்போதைய சிக்கல்கள் விரைவில் தீருமென்றும், ஒரே பாகிஸ்தான் மீண்டும் உருவாகுமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

முஜிபுர் ரகிமான் நிலை ?

சிறையில் இருந்தபோது பத்திரிகைகளைப் படிக்கவோ, வானொலியைக் கேட்கவோ முஜிபுர் ரகிமான் அனுமதிக்கப்படவில்லை என்று கருதப்படுகிறது; எனவே, முழுத் தகவலும் தெரிந்த பிறகே பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்று முஜிபுர் ரகிமான் கூறியிருக்கவேண்டும் என்று நம்பப்படுகிறது; ஆகவே, இனி மேல்தான் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.

இதுவரையில நடைபெற்ற விவாதம துவக்கக கட்டமேயாகும் என்றும, இந்தக் கட்டங்களில் பூட்டோ கலந்துகொள்ளாமல் அவரது நெருங்கிய ஆலோசகர்களே கலந்துகொண்டிருப்பதாகவும வேறொரு தகவல் தெரிவிககிறது.

ரகிமான் விடுதலை எப்போது?

எப்படியிருப்பினும், வருகிற சனவரி முதல் வாரத்தில் ரகிமான் விடுதலையடையக்கூடும் என்று கருதப்படுகிறது.

தமது சகாக்களைக் கலக்காமல் எந்த முடிவையும் எடுக்க முஜிபுர் ரகிமான் மறுத்துவிடுவாரா என்றே அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

அரசிடம் செல்வாக்குள்ள பலரும் ரகிமானை உடனே வங்க தேசம் திரும்ப அனுமதிக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றனராம்.

அவர் டாக்கா திரும்ப அனுமதிக்கப்படவில்லையானால், 'ஒரே பாகிஸ்தான்' என்ற கனவுக்குச் சிறிதும் வாய்ப்பில்லாது போகும் என்று பலரும் அஞ்சுகின்றனராம்.

வெளிநாட்டுத் தூதுவர்கள் பலரும் முஜிபுர் ரகிமானைச் சந்திக்க முயறசிததாகவும், ஆனால் அது முடியாமல போய்விட்டதாகவும டெல்லி அதிகார வட்டாரததில் கூறப்படுகிறது.

ஒற்றுமை என்ற ஆயுதம் ஏந்தியுள்ளோம்

இனி எப்படிப்பட்ட பகைவனும் நம்மை வீழ்த்த முடியாது

திருவாரூர், டிச. 27—

"இந்தப் போரில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள 52 பேர் இதுவரை வீர மரணம் அடைந்திருப்பதாகச் செய்திகள வந்துள்ளன; இன்னும் வரவேண்டிய செய்திகள் முழுமையாக வரவில்லை.

"நமது தரப்பில் இரண்டாயிரம் பேர் வீர மரணம் அடைந்திருக்கிறார்கள். தாயகம் காத்திட -- தாய்நாட்டின் மண்ணுக்கு புகழ் தேட உயிரை ஈந்துள்ளார்கள்!

"நம் மண்ணில் ஓர் அங்குலம்கூட விட்டுக் கொடுக்க முடியாது என்ற உறுதியை நிறைவேற்ற நம் நாட்டு வீரர்கள, இன்னுயிரைப் பணயம் வைத்து களத்தில் நின்றார்கள் -- வென்றார்கள்! மேலும் நின்றுகொண்டே இருக்கிறார்கள் -- வெற்றி குவிக்க!

"அவர்களுக்கு நாம் தரவேண்டிய காணிக்கையைத் தந்தாக வேண்டும; தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர், 'ரூ. 80 இலட்சம் அளிக்க முடியும்' என்று கூறினார்; மணலி கந்தசாமி பேசும் போது, 'ரூ. 80 இலட்சத்திற்கும அதிகம் தருவோம்' என்று சொன்னார்-- முதலமைச்சர், ரூ. 10 கோடி தருவதாகச் சொன்ன வார்த்தையைப் பொய்யாக்கி, ரூ. 15 கோடி தருவோம்' என்றார்!

"இவ்விதம் என் வார்த்தையைப் பொய்யாக்குவதானால், அதற்காக நான் உள்ளபடியே மகிழ்வேன்; ஆனால், ரூ. 10 கோடி என்று சொல்லி, ரூ. 9 கோடி என்று பொய்யாக்காமல், ரூ. 10 கோடி என்பது ரூ. 15 கோடி' என்று மாறினால், நான் பெருமகிழ்ச்சியடைவேன.

"மாவட்ட ஆட்சித் தலைவர், இந்த நான்கைந்து நாட்களில் மிகுந்த சிரமம் எடுத்து, அலுவலர்கள் -- பொதுவாழ்வுப் பிரமுகர்கள் ஆகியோரின ஒத்துழைப்புடன ரூ. 15,14,531.68 வழங்கியிருக்கிறார்கள்; போர் வீரர்களுக்குத தேவையான ரூ. 25,000 மதிப்புள்ள பொருள்களை எனது துணைவியாரிடம அளித்திருக்கிறார்கள்.

"எல்லா வகையிலும் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது; அனைத்துக் கட்சியினரும நல்ல முறையில் ஒத்துழைப்புத் தருகிறார்கள்.

"நமது மண் காப்பாற்றப்பட வேண்டும்' -- என்ற உணர்ச்சியோடு செயல்பட்டு வருகிறோம்; இப்படிப்பட்ட உணர்ச்சி இருக்கும் வரையில் எந்த எதிரியும -- எப்படிப்பட்ட பகைவனும நம்மை வீழ்த்த முடியாது! ஒற்றுமையே தலைசிறந்த ஆயுதம! அந்தத் தலைசிறந்த ஆயுதம, நமக்கு என்றும வெற்றி தேடித் தரும!"

--முதலமைச்சர் கலைஞர்

(திருவாரூர் கூட்டத்தில்)

கிழக்கு வங்க முன்னாள் கவர்னர் எங்கே?

டாக்கா, டிச. 28—

கிழக்கு வங்கத்தில் பாகிஸ்தான் கவர்னராக் இருந்த ஏ. எம். மாலிக், இன்னமும இந்திய இராணுவத்தின பாதுகாப்பிலேயே இருந்து வருவதாக உலக செஞ்சிலுவை நிறுவனம் அறிவித்திருக்கிறது.

தங்கள் பிரதிநிதிகள் ஏ. எம். மாலிக்கைச் சந்தித்ததாகச செஞ்சிலுவைச் சங்கம தெரிவித்தது.

மாலிக்கையும் -- அவரது சகாக்களையும், இனகொலை புரிந்த குற்றத்திற்காக விசாரணை செய்யும் பொருட்டு வங்க தேச அரசிடம் ஒப்படைத்துவிட்டதாக வெளியான செய்தி தவறுதலாக வந்திருப்பதாக வங்க தேச அரசு அதிகாரிகளும் தெரிவித்தனர்.